இந்நேர்வில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும், கீழ்நிலைப் பணியாளர்களுக்கு, 20 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில், பார்வை 2ல் காணும் அரசாணையில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது (9) நபர்களுக்கு பேரூராட்சிகளில் காலியாக உள்ள அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிடங்களில், நிபந்தனைகளுக்குட்பட்டு, பார்வை 3இல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி பதவி உயர்வின் மூலம் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

பார்வை 3இல் காணும் விவரப்படி நியமனம் செய்யப்பட்ட 9 நபர்களும் அவர்களது பணியினை, அவர்கள் அமைச்சுப் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யக் கோரி தனியர்களால் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள், பார்வை 4இல் காணும் விவரப்படி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களால் பரிந்துரை செய்து கருத்துருவாக பெறப்பட்டுள்ளது. இக்கருத்துருக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை பரிசீலிக்கப்பட்டதில், தனியர்கள் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது தேதி வரை மேற்காணும் பணியாளர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ, தண்டனைகளோ ஊதிய உயர்வினை பாதிக்கும் வகையிலான விடுப்புகளோ ஏதும் இல்லை, இவர்களது பணிக்காலத்தில் எந்தவித பணிமுறிவும் ஏற்படவில்லை.

எனவே, பார்வை 2ல் காணும் அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்பதாலும், இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓராண்டு காலம் பணிமுறிவின்றி பணிபுரிந்து வருவதாலும், அவர்களது பணி நிலையான இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் நிலையில், அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர்பெயர், பதவி தற்போது பணிபுரியும் பேரூராட்சி. (திருவாளர்கள்) | அரசு நிலையாக்கப்பட்ட பணியிடமான இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | சி. சேகர்<br>வரித்தண்டலர்,<br>பெருமகளூர் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>23.12.2019 மு.ப. | 23.12.2019 மு.ப. |
| 2 | எஸ். ரமேஷ்குமார்<br>இளநிலை உதவியாளர்,<br>வேப்பத்தூர் பேரூராட்சி. | இளநிலை உதவியாளர்,<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |
| 3. | நா. குணசேகரன்<br>வரித்தண்டலர்,<br>திருபுவனம் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>18.12.2019 மு.ப. | 18.12.2019 மு.ப. |

பேரூராட்சி அலுவலகம் ★ தஞ்சாவூர் மாவட்டம் ★ வேப்பத்தூர் - 612105

28.12.2022

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
வேப்பத்தூர்
தஞ்சாவூர் மாவட்டம்